இம்மருந்தகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மருந்தகத்திற்குத் தேவையான மருந்துகள் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது தாமதமின்றி கொண்டுவரப் படுகிறது. நோயாளிகட்கு இரண்டு நாட்களுக்கு மேலும் ,ஐந்து நாட்களுக்கு அதிகமாகாமலும் மருந்து வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

Practitioners in Indian System of medicine

* 27 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the **Minister for Public Health be pleased to state—**

(*a*) whether the time limit for registration as **practitioners** of Indian System of Medicine, has been extended; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஆம்.

வைத்திய மரபில் பயிற்சி பெற்றவர்கள் அல்லது பாரம்பரை வைத்தியர் கள் அல்லது வைத்திய மரபில் பயிற்சி பெற்றதுடன் பாரம்பரை வைத்தியர்களாக இருப்பவர்கள் ஆகியோர் இந்திய மருத்துவ மத்தியக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்கான கால வரம்பு கடைசி முறையாக 31—3—1973 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது.

அரசு மருத்துவ மனைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 28. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அருகி லேயே குடியிருப்பு வசதிகள் செய்துதரச் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பெரிய மருத்துவ மனைகளிலே பணியாற்றுகிற செவிலியர்களுக்கு எல்லாம் 'குவார்ட்டர்ஸ்' அமைக்கப்பட்டிருக்கின்றன. நிரந்தரமான ஊழியர்களாக பணியாற்றுகின்ற வர்களுக்கான அவர்கள் பணியாற்றுகின்ற மருத்துவ மனைகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கான குடியிருப்பு இடங்கள் ஏற்படுத்த எதிர் காலத்திலாவது ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவர அரசு ஆவனசெய்யுமா ?